2004 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட சாதனையைச் செய்திருக்கிறீர்களா, செய்திருக்கிறீர்களா என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டார். Detroit-ஆக மாற்றி விட்டீர்களா என்று கேட்டார். புரியவில்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுக்கோ, அல்லது அவருடைய இயக்கத்திற்கோ ஏன் பார்வை தெரியாமல் போய்விட்டது என்று புரியவில்லை. ஹூண்டாய் இங்கே இருக்கிறது. ஃபோர்டு இங்கே இருக்கிறது. அகில உலகத்திற்கே அனுப்பவேண்டிய கார்களை எல்லாம் ஃபோர்டு நிறுவனம் இந்தியாவிலே தமிழகத்திலே செய்வதற்கு முன்வந்து அதைத் தொடங்கி இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப்பட்ட நிலை இருக்கின்றபோது, இது இருக்கின்றதா, இருக்கின்றதா என்று கேட்டார். அவை எல்லாம் இங்கே இருக்கின்றன, இருக்கின்றன, இருக்கின்றன. தமிழ்நாடு பிற மாநிலங்களைவிட முன்னிலையில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) 49,000 கோடி ரூபாய் முதலீட்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி முதலமைச்சர் அம்மா அவர்கள், உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து கொண்டுவந்து தமிழ்நாட்டை வளமிக்க மாநிலமாக மாற்றியிருக்கிறார், மாற்றியிருக்கிறார் எனக் கூற விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10-2-2004) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-24 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

TRUTH ALONE TRIUMPHS

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

31. 2000-2001 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் இருபத்தி ஏழாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

32. 2002-2003 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் முப்பத்தி எட்டாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ, பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)